**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 226/2024 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | ராஜமூர்த்தி |
| Father Name | : | தங்கவேல் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 61 |

All accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.04.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. கடந்த 13.05.2024 ஆம் தேதியன்று வெள்ளக்கோவில் காவல் நிலைய தலைமைக்காவலர் 916 திரு.பாலசுப்பரமணியம் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது வெள்ளாத்தான்கரைப்புதூர் மணி என்பவரின் மனைவி மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளக்கோவில் காவல் நிலையக் குற்ற எண். 207/2024 – U/S: 454, 380 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் இவ்வழக்கு கோப்பை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 13.05.2024 ஆம் தேதியன்று மாலை 16.00 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் வேலுச்சாமி மற்றும் ரவி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து

வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் சம்பவ இடத்தில் கிடந்த உடைக்கப்பட்ட பூட்டு, பாலை கத்தி இரண்டையும் சம்பவ இடத்தில் வைத்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் மணி க/பெ.மணி, மணி, சரோஜா, கவிதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து சாட்சிகளை விசாரித்ததில் சாட்சி மணி என்பவர் அவரது பீரோவில் வைத்திருந்த ரூ.1,30,000/- பகல் களவு நடந்தது உண்மை என்று தெரியவந்தது.

5. பின்னர் 14.05.2024 ஆம் தேதியன்று சாட்சி பழனிச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 22.05.2024 ஆம் தேதியன்று மூலனூர் கரட்டுப்பாளையம் ரோட்டில், மயில்ரங்கம் பிரிவு அருகே போலீஸ் பார்ட்டிகளுடன் வாகன தணிக்கை செய்தபோது TN 28 AV 0430 என்ற எண்ணுள்ள பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் எங்களை கண்டவுடன் திரும்பி செல்ல முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர்கள் பெயர் 1. பாலாஜி, 2. தினேஷ்குமார், 3.கோபி என்றும் அவர்கள் சின்ன தாராபுரம் பகுதியை சேர்ந்தவர்கள் என்று கூறியும் 13.05.2024 ஆம் தேதி வெள்ளாத்தான்கரைப்புதூர் வீட்டில் பணம் திருடிச்சென்ற குற்றத்தை ஒப்புக்கொண்டனர். மூன்று நபர்களையும் முறைப்படி கைது செய்வதற்கான காரணம் கூறி 22.05.2024 ஆம் தேதியன்று காலை 1. பாலாஜி என்பவரை 9.45 மணிக்கும், 2. தினேஷ்குமார் என்பவரை காலை 9.50 மணிக்கும், 3. கோபி என்பவரை காலை 10.00 மணிக்கும் கைது செய்தேன். பின்னர் கைதிகளை தனித்தனியாக விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்தேன். பின்னர் 1 ஆம் எதிரி தனாக முன்வந்து தனது சட்டைப்பையில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.30,000/- யை காலை 10.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் கைப்பற்றினேன். 2. தினேஷ்குமார் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/- யை காலை 12.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் கைப்பற்றினேன். 3. கோபி மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/- யையும் திருட பயன்படுத்திய மோட்டார் வாகனத்தையும் காலை

13.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் கைப்பற்றினேன். மூன்று எதிரிகளை கைது செய்தது பற்றி அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. எதிரிகளுடன் 22.05.2024 ஆம் தேதியறு 15.30 மணிக்கு காவல் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது.

6. பின்னர் எதிரிகள் மூவரையும் கைவிரல் ரேகை பரிசோதனை செய்து நிலைய தலைமைக்காவலர் 1721 பொன்னுச்சாமி, 758 பிரசாத், காவலர் 1618 திருவேங்கடம் ஆகியோர்கள் மூலம் மருத்துவ நமூனா மூலம் 22.05.2026 காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பியும் பின்னர் காங்கேயம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி அடைப்பு காவல் பெற அறிக்கையுடன் அனுப்பிவைத்தேன்.

7. பின்னர் இவ்வழக்கில் எதிரிகளிடம் இருந்து கைப்பெற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் 19.06.2024 ஆம் தேதியன்று காங்கேயம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 (4 எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பணம் பெற்றதற்கான புகைப்படம் சா.பொ. 1, பாலை கத்தி சா.பொ.2, பூட்டு சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. பின்னர் சாட்சி மணி என்பவரை திரும்பவும் விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் பாலசுப்பரமணியம் என்பவரை விசாரித்த வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகள் ஒன்று கூடி திருட்டுச்செயலில் ஈடுபட்டதால் சட்டப்பிரிவு 454, 380 IPC ல் இருந்து சட்டப்பிரிவு 454, 380 r/w 34 IPC ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 454, 380 r/w 34 IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

புகாரில் சம்பவத்தின் போது இரண்டு நபர்கள் மட்டும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் தேதி 13.05.2024 என்றால் சரிதான். மேற்படி தேதியன்று சம்பவ இடம் சென்று பூட்டு மற்றும் பாலைகத்தி கைபற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் வேலுச்சாமி, ரவி ஆகியோர்கள் மூலம் கைப்பற்றினேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளிடம் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த மேற்படி தேதியன்று ஒப்புதல் வாக்குமூல சாட்சியான பாலுசாமி என்பவர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இல்லை. எதிரிகளை கடந்த 22.05.2024 ஆம் தேதியன்று கைது செய்து ஒப்புதல் வாக்மூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மூன்று எதிரிகளிடமும், பெற்றதாக சொல்லப்படும ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் பாலுசாமி மற்றும் பிரதீப் ஆவார்கள். எதிரிகளிடம் பணம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜர்களில் மேற்படி சாட்சிகள்தான் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கடந்த 22.05.2024 ஆம் தேதியன்று கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து பாலுசாமி மற்றும் பிரதீப் ஆகியோருடையது என்றால் சரிதான். 13.05.2024 ஆம் தேதியன்று சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் வேலுச்சாமி மற்றும் ரவி ஆவார்கள். மேற்படி மகஜரில் உள்ள கையெழுத்துகள் வேலுச்சாமி மற்றம் ரவி ஆகியோருடையது அல்ல என்றால் சரிதான். அந்த இரண்டு கையெழுத்தும் பாலுசாமி மற்றும் பிரதீப்குமார் ஆகியோருடையது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், அங்கு வைத்து கைபற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றும், கடந்த 22.05.2024 ஆம் தேதியன்று எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதே தேதியில் கைப்பற்றுதல் மகஜரில் களவு போன பணத்தை கைப்பற்றியதாகவும் சொல்வது பொய் என்றும், அதனால்தான் அனைத்து கைப்பற்றுதல் மகஜர்களிலும், பாலுசாமி மற்றும் பிரதீப்குமார் ஆகியோருடைய கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாலுசாமி அ.சா.1 யின் மருமகன் என்றால் சரிதான். வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன

நேரத்தில் எதிரிகளை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், எதிரிகள் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையான எதிரிகளை கண்டுபிடிக்க இயலாததால் வழக்கிற்க சம்பந்தம் இல்லாத இந்த எதிரிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.17 20:37:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்